# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2064/57 - 2018 අප්‍රේල් මස 01 වැනි ඉරිදා - 2018.04.01

*2064/57 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம்***

66 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

வங்கி வியாபாரமொன்றைக் கொண்டுநடாத்தும் ஆளொருவரினால் செய்யப்படும் கடனுரிமைக் கோரலொன்றிற்காகக் கவனத்திற்கொள்ளப்பட்ட குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளுடன் தொடர்புடையதாக, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 66(2) ஆம் பிரிவின்கீழ் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் திஸாநாயக முதியன்செலாகே லலித் ஜவன் திஸாநாயக ஆகிய நான், அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு நிபந்தனைகளுக்கு உட்பட்ட வகையில் இலங்கை மத்திய வங்கியினால் செய்யப்பட்ட உரிய ஏற்பாடுகளுக்கு இணங்க கடனுரிமை தொடர்பில் செய்யப்படும் குறிப்பான ஏற்பாடுகளை இவ்வறிவித்தலின் மூலம் குறித்துரைக்கின்றேன்.

டி. எம். எல். ஜ. திஸாநாயக,
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
கொழும்பு 02,
2018, ஏப்பிறல் 01.

**அட்டவணை**

(1) இலங்கை மத்திய வங்கியினால் செய்யப்பட்ட உரிய கட்டளைகளுக்கு இணங்கிய முறையில் கடன் வசதிகளின் எதிர்கால அபாயங்கள் தொடர்பில் ஏற்பாடுகள் செய்யப்பட மாட்டாது.

(2) இலங்கை மத்திய வங்கியினால் செய்யப்பட்ட உரிய கட்டளைகளுக்கு இணங்கிய முறையில் நிதி நிறுவனமொன்றினால் கொண்டு நடாத்தப்படும் அடகு பிடிக்கும் வியாபாரமொன்றின் அடகுக் கடன்காரர்களுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட மாட்டாது.

(3) துணை ஆளொருவருக்கு வழங்கப்படும் கடனுரிமை தொடர்பில் ஏற்பாடுகள் செய்யப்பட மாட்டாது.

(4) இலங்கைக்கு வெளியில் வசிக்கும் ஆளொருவருக்கு வழங்கப்படும் கடனுரிமையுடன் தொடர்புடையதாக ஏற்பாடுகள் செய்யப்பட மாட்டாது.

05-50


1A - PG 4000 — 432 (2018/04) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.